1992 பிப்ரவரி 4]

27—

ஆரம்ப சுகாதார நிலையம்.

* 1546 டாக்டர் திருமதி வெ. சரோஜா :

மாண்புமிகு மக்கள் நலவாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கி.பி. 2000 ஆண்டுகளுக்குள் அனைவருக்கும் நல்வாழ்வு என்ற அரசின் கொள்கைப்படி சமவெளிப் பகுதியில் 30,000 ஜனத்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையமும், மலைப்பகுதி எனில் 20,000 ஜனத்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற கணக்கின்படி ஆரம்ப சுகாதார நிலையங்கள் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் நிறுவப் பட்டுள்ளது. தமிழ்நாட்டில் தற்போது மொத்தம் 1,429 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்கி வருகின்றன.

டாக்டர் (திருமதி) வெ. சரோஜா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஆரம்ப சுகாதார நிலையம் இருந்தும், இவ்வளவு ஜனத் தொகைக்கு என்று ஒதுக்கப்பட்டிருக்கக்கூடிய ஆரம்ப சுகாதார நிலையங்கள், மக்களின் தேவையை இன்னும் முழுமையாகப் பூர்த்தி செய்ய இயலவில்லை. குறிப்பாக, எனது தொகுதியில் ஒரு சில ஊர்களில் அப்படிப்பட்ட குறைகள் இருக்கின்றன. அது குறித்து, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருக்குக் கடிதம் எழுதியுள்ளேன். அதை அரசு பரிசீலித்து ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது 30,000 ஜனத்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற விகிதத்தில் இருக்கிறது. ஒவ்வொரு ஒன்றியத்திலேயும் எவ்வளவு ஜனத்தொகை இருக் கிறதோ, அதற்கேற்ப அந்த நிலையம் அமைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்வது, துணை சுகாதார நிலையங் களைப் பற்றி; அதாவது சப்-சென்டர்ஸைப் பற்றி சொல்கிறார்

கள். சப்-சென்டரில் இப்போது தேவையான அளவுக்கு, அதாவது 5,000 ஜனத்தொகைக்கு ஒரு சப்-சென்டர் என்ற விகிதத்தில் இருக்கிறது. எங்கேயாவது அவ்வாறு குறைபாடு இருந்தால், அதை நிவர்த்தி செய்வதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ளும்.

டாக்டர் (திருமதி) வெ. சரோஜா: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இருக்கக்கூடிய சுகாதார நிலையங்களில் மருந்துகளே இல்லாமல் இப்போது இருந்து கொண்டிருக்கின்றன. மருந்துகள் கொடுக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட ஒரு நிலை முன்பு இருந்தது மறுக்கமுடியாத உண்மை. ஆனால், இந்த அரசு பொறுப்பேற்ற பின்னர், மருந்துகள் தேவையான அளவு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறோம். இப்போது, ஆங்காங்கே இருக்கிற மெடிகல் ஆபீசர்ஸ், சீப் மெடிகல் ஆபீசர்ஸ் தேவையான மருந்துகளை தாங்களாகவே வாங்கிக்கொள்ளலாம் என்ற உத்தரவையும் அரசாங்கம் போட்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் ரூ. 10,000 கூடுதலாக மருந்துகள் வாங்குவதற்கான நடவடிக்கையை எடுத்திருக்கிறார்கள். இந்த நேரத்தைப் பயன்படுத்திக்கொண்டு, இப்போதுள்ள ஒரு பிரச்சினையைத் தெரியப்படுத்தலாம் என்று கருதுகிறேன். கடந்த 2, 3 ஆண்டுக்காலமாக மருந்துகள் வாங்குகிற முறையிலே மாறுபாடுகள் செய்துவிட்ட காரணத்தினால், அவை வாங்குவதிலே மிகப் பெரிய தடை ஏற்பட்டிருக்கிறது; சுணக்கம் ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக, டெண்டர் கால் ஃபார் செய்த பின்னாலே, அந்த டெண்டரை ஃபைனலைஸ் செய்து கொடுப்பதற்கு மிகப் பெரிய காலதாமதம் ஏற்பட்டுவிட்ட காரணத்தினால், இந்த ஆண்டு அதிலே மிகப் பெரிய சோதனைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறோம். இருந்தாலும், அதையெல்லாம் நிவர்த்தி செய்கிற வகையிலே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இன்னொரு 3 மாத காலத்திற்கு இந்தச் சிரமத்தை நாம் சந்தித்துத்தான் ஆகவேண்டும். காரணம், பட்ஜெட் வந்து

1992 பிப்ரவரி 4]

பின்னாலே தான், புதிய சென்ட்ரல் பட்ஜெட் வந்த பின்னாலே தான் புதிய டெண்டர் கால்ஃபார் செய்ய முடியும். அதுவரை லோகல் பர்சேஸ் என்ற முறையிலே கொஞ்சம் அதிகச் செலவு ஆனாலும் கூட தேவையான மருந்துகளை வாங்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

முற்பகல் 10.00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருத்துவ உதவி செய்வதாக நம்முடைய அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அநேகமாக கடந்த 2-ம் தேதி என்னுடைய தாலுக்கா மருத்துவமனையில் ஒருவர் காரிலே அடிபட்டு மிகவும் உயிருக்கு ஆபத்தான நிலையிலே மருத்துவமனைக்கு எடுத்துச் செல்கின்றபோது தாலுகா மருத்துவ மனையிலே சலைன் பாட்டில் கிடையாது ; பேண்டேஜ் துணி இடையாது ; குறிப்பாக, டியூட்டி பார்க்கிற டாக்டர் கிடையாது. இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை அநேகமாகத் தமிழகம் எங்கும் இருக்கும் என்று நான் கருதுகிறேன். அந்தக் குறைபாடுகளை உடனடியாகக் கவனித்து, ஏழை எளிய மக்களுக்காவது இன்றைக்கு ஆரம்ப சுகாதார நிலையங்களில் மட்டுமல்ல, தாலுக்கா மருத்துவமனையிலாவது ஒரு அவசரத்திற்காவது வேண்டிய மருந்துகளைக் கொடுத்து உதவுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னபடி, சில இடங்களிலே அந்தத் தவறுகள் இருக்கலாம். ஆனால் எல்லா இடங்களிலும் அப்படி இருக்கும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மொத்தமாகச் சொல்வது தவறான தகவல் ஆகும். சில இடங்களிலே இருப்பதை நாங்களே நேரிடையாகக் கவனித்து அதைப் போக்குவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறோம். கடந்த மூன்று ஆண்டுக் காலமாக இந்த மருந்துகள் வாங்குகிற வகையிலே ஏற்பட்ட சில தவறுகளின் காரணமாக அல்லது தவறான அணுகுமுறையின் காரணமாக குறைபாடுகள் ஏற்பட்டது. இப்போது இந்த ஆண்டும் நாம் அதே முறையைக் கடைப்பிடிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டு விட்டது. காரணம், இந்த அரசாங்கம் பொறுப்பு ஏற்பதற்கு முன்னாலேயே அந்தக் கமிட்டி அமைக்கப்பட்டு, அதற்குத் தேவையான எல்லா

டெண்டர்களையும் அவர்கள் கால்ஃபார் செய்து விட்டார்கள். இன்றைக்கு நாம் டெண்டர் கால்ஃபார் செய்தால்கூட, வருகிற 28-ம் தேதி வரை சரியான டெண்டர் கிடைக்காது. எனவேதான் வருகிற 15-ம் தேதி டெண்டர் கால்ஃபார் செய்ய இருக்கின்றோம். அதிலேயிருந்து ஒரு மாத காலம் அவர்களுக்குக் கொடுக்க வேண்டும். ஏறத்தாழ 1½ மாத காலம் நமக்கு அதைப் பைனலைஸ் செய்வதற்குத் தேவைப்படுகிறது. காரணம் 1200 மருந்துகள் அதன் மூலம் வாங்கப்பட வேண்டியிருக்கிறது. விலைப் பட்டியலைத் தேர்ந்தெடுத்து, குறைந்த விலை எது என்று பார்த்துக் கொடுக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. தரம் பார்க்க வேண்டியிருக்கிறது. ஏறத்தாழ 3 மாத காலம் அதைப் பரிசிலனை செய்தால்தான் அவற்றைப் பைனலைஸ் செய்ய முடியும். இருந்தாலும் கூட, விரைவாகச் செய்ய வேண்டுமென்று கருதி, ஒன்று கமிட்டி ஆகப் பிரித்து, 1½ மாத காலத்திற்குள் அதைச் செய்து கொடுக்க வேண்டும் என்ற ஏற்பாட்டைச் செய்திருக்கிறோம். இதற்கு இடைப்பட்ட நேரத்திலே, அதிக விலை இருந்தாலும் பரவாயில்லை, வெளியிலே வாங்கிக் கொள்ளுங்கள் என்று உத்தரவு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிகாரிகள் வாங்கப் பயப்படுகிறார்கள். பின்னாலே அவர்களுக்குப் பிரச்சினை வரும் என்று கருதி வாங்கப் பயப்படுகிறார்கள். இருந்தாலும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்னார்கள்—மருந்து இல்லை என்ற நிலை வரக்கூடாது என்ற காரணத்தினால் அவர்களுக்கு உறுதி செய்யப்பட்டிருக்கிறது. உங்களுக்குப் பிரச்சினை வராது, தேவையான மருந்துகளை வாங்கிக் கொள்ளுங்கள் என்று உத்தரவிடப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா: ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்பட வேண்டியது பற்றியாகும். இப்படி, மருந்து, ஊசி என்று போய்க் கொண்டே இருந்தால் நம்முடைய வினாப் பட்டியலை முடிக்க முடியாது. அடுத்து, வினா எண். 28 திரு. இரா. நடேசன். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

28—

ரப்பர் தொழிற்சாலை.

* 3509. திரு. இரா. நடேசன்:

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—